# உங்களுக்குச் சமாதானம்

Praise the Lord: Let us Pray.

**யோவான்/John 16:33** (பக்கம் 152)

என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும்பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன். என்றார்.

"I have told you these things, so that in me you may have peace. In this world you will have trouble. But take heart! I have overcome the world."

> I have told you these things, so that in Me you may have [perfect] peace and confidence. In the world you have tribulation and trials and distress and frustration; but be of good cheer [take courage; be confident, certain, undaunted]! For I have overcome the world. [I have deprived it of power to harm you and have conquered it for you.] (AMP)

கடவுள் பக்தியுடன் நீங்கள் வாழ்வதற்காக நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.
கடவுள் ஒருவரே நமக்கு,
இந்த உலகத்தின் உபத்திரவங்களுக்கு மத்தியில் ஆறுதலும் சமாதானமும் கொடுப்பவர்.
இந்த உலக வாழ்க்கைக்குப்பிறகும், நமது ஆத்மாவுக்கு சமாதானத்தைக் கொடுப்பவர்.
**ஏனென்றால், கடவுள் ஒருவரே சதாகாலங்களிலும் உயிரோடேயிருக்கிறவர்.**

இப்படி இவ்வுலக சமாதானத்தையும் மறுஉலக வாழ்க்கையையும் பெற்றுக்கொள்ள,
நாம் கடவுளை பல உருவகங்களிலே நமக்குமுன் கொண்டுவந்து,
வணங்கி, கடவுள் அருளைப் பெற்றுக்கொள்ள முயற்சிக்கிறோம்.
இது இறைவனிடத்திலிருந்து நாம் பெற்ற ஞானத்தை வைத்து நாமே செய்கிற முயற்சிகள்.
அதனால் பல்வேறு மக்கள் பல்வேறு விதமான வழிபாட்டுமுறைகளை கடைபிடித்து வருகிறார்கள்.
இவைகளுக்குள் கருத்துவேறுபாடும் குழப்பங்களும் கூட வருகின்றன. இப்பொழுது உலகத்தின் சூழ்நிலைகளை கவனித்துப் பார்த்தால் இது நன்றாக விளங்கும்.

சகலவற்றையும் அறிந்த கடவுள், இந்த குழப்பமான சூழ்நிலையிலிருந்து நம்மை விடுவிக்க,
அவருடைய ஞானத்தினாலே *(மனித ஞானமல்ல, கடவுளுடைய ஞானம்),*
சரியான வழியை ஏற்படுத்தி, அவரே மனிதனாக வந்து, நமக்கு முன்மாதிரியாக வாழ்ந்து,
அந்த வழியை நிறைவேற்றி, உலகத்தை ஜெயித்து, இதுதான் நீங்கள் இவ்வுலக சமாதானத்தையும் மறுஉலக வாழ்க்கையையும் பெற்றுக்கொள்ள சரியான வழி என்று காண்பித்துவிட்டார்.
இறைவனே, நாம் இறைவனை அடைய வழியை ஏற்படுத்தி, நாம் அவருடைய அருளைப்பெற்றுக்கொள்ள நமக்காக பிரியத்தோடு காத்துக்கொண்டிருக்கிறார்.

*யோவான் 14,15,16 அதிகாரங்களில் இதை இயேசுகிறிஸ்துவே சீஷர்களுக்கு விளக்கி, முடிவில்*
என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும்பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன். என்றார்.
அதன்பிறகு சீஷர்களுக்காகவும் நம் எல்லோருக்காகவும் ஜெபிக்கிறார்.
ஜெபித்துக்கொண்டேயிருக்கிறார். *(இதை யோவான் 17ம் அதிகாரத்தில் வாசிக்கலாம்.)*

தயவுசெய்து நீங்கள் ஒருமுறை இந்த வேதாகமத்தை வாசித்துப்பாருங்கள். கடவுளின் இந்த வார்த்தை உங்களை ஆட்கொண்டு ஆசீர்வதிக்கும். ஆமென்.

சகல பரிபூரணமும் கிறிஸ்துவுக்குள்ளே வாசமாயிருக்கவும், கிறிஸ்து சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் இயேசுகிறிஸ்து மூலமாய் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் தேவனுக்குப் பிரியமாயிற்று. (கொலோசெயர் 1:19-20)
For God was pleased to have all his fullness dwell in Christ, and through Christ to reconcile to himself all things, whether things on earth or things in heaven, by making peace through his blood, shed on the cross. (Colossians 1:19-20)
தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். "For God so loved the world that he gave his one and only Son,[a] that whoever believes in him shall not perish but have eternal life. (யோவான்/John 3:16)

Let us Pray